சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.01/2024</u>

04.12.2025

வா.சா.1 திரு.நடராஜன், த/பெ. கருப்பண்ணன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொந்தமாக திருவாரூரில் வீடு இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் நிரந்தர முகவரி கும்பகோணம் தாலுக்கா, நாச்சியார்கோவில் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமாராக 45 வயது இருக்கும் பிரதிவாதிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றால் எனக்கு தெரியாது. குடும்ப செலவிற்காக பணம் வேண்டும் என கேட்டார். பிரதிவாதி மாதம் ரூ.80,000/- சம்பளம் வாங்குகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் வருமானவரி ஒவ்வொரு வருடமும் செலுத்திவருகிறேன். வருமானவரி கணக்கில் கொடுக்கல் வாங்கல் கணக்குகள் இருக்காது. நான் வங்கியில் எவ்வளவு பணம் போடுவேன் எவ்வளவு பணம் எடுக்கிறேன் என்ற விவரம் இருக்கும் என்றால் சரிதான். 2022, 2023 வருடத்திற்கு நான் வருமானவரி செலுத்தியதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வருமானவரி கணக்கில் பிரதிவாதிக்கு கொடுத்த கடன் ரூ.3,00,000/- காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விவசாய வருமானத்திலிருந்து வந்ததால் அது காட்டப்படவில்லை. 2022 பிப்ரவரி மாதம் விவாசயத்தின் மூலமாக ரூ.3,00,000/- வந்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு 06.02.2022 அன்று கடன் கொடுத்தேன். பிரதிவாதி திருவாரூர் வந்து என்னிடம் கடன் வாங்கினார். கடன் வாங்கும் போது காலை 9.00 மணியிருக்கும். கடன் கொடுத்த நாளின் கிழமை தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் பிரதிவாதி திருவாரூருக்கே வரவில்லை என்றாலும் அவர் ஓஎன்ஜிசி அலுவலகத்தில் வேலை பார்த்துவந்தார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி தாவா கடனுறுதிசீட்டில் கையொப்பம் போடுவதற்கு முன்பு வேறு ஆவணங்களில் பிரதிவாதி கையொப்பம்

போட்டுள்ளதை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் தகப்பனார் பெயர் கைலாசம். பொதுவாக அனைவரும் தகப்பனார் பெயரை இன்சியலாக காண்பித்து கையெழுத்து போடுவார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தகப்பனார் பெயர் எஸ் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல, எஸ்.கே என குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதி இதுநாள் வரை எஸ்.கே. என தான் கையொப்பம் செய்துவருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள கைசயெழுத்தை நான் பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் பிரதிவாதி 06.02.2022 அன்று எந்தவித கடனுறுதிசீட்டிலும் கையொப்பம் செய்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையதுதான் என்பதை அவரின் மற்ற கையெயப்பங்களுடன் ஒப்பிட்டு கையெழுத்து நிபுணர் மூலம் நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். கையெழுத்து நிபுணருக்கு அனுப்பவேண்டும் என்று நான் இந்த வழக்கில் இதுநாள் வரை மனு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 06.02.2022 அன்று பிரதிவாதி கடன் பெற்றதாக சொல்லும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் அனுப்பிய அறவிப்பை வாங்கவில்லை என்றால் சரிதான். நான் அறிவிப்பு கொடுத்த காலத்தில் பிரதிவாதி எங்கு பணியில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. எனவே நான் அறிவிப்பு கொடுத்ததாக சொல்லும் விவரமே பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டு ஏற்பட்ட பின்னிட்டு எந்த தேதியில் பிரதிவாதியை நேரடியாக சந்தித்து பணத்தை கேட்டேன் என்றால் தேதி ஞாபகமில்லை. பிரதிவாதி திருவாரூர் சைட்டில் வேலை பார்த்த போது போய்கேட்டேன். பிரதிவாதியின் தற்போதைய செல் போன் நம்பர் தெரியாது. முன்பு வைததிருந்த செல்போனை தொடர்பு கொண்டு கேட்டேனா என்றால் கேட்டேன். நானும் பிரதிவாதியுடைய அக்காவின் கணவரும் நண்பர்கள் என்றால் அக்கா கணவர் யார் என்றே எனக்கு தெரியாது. பிரதிவாதியின் அக்கா கணவர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அவ்வப்போது தேவைப்படும் பணத்தை என்னிடம் வாங்கி கொள்வார் என்றாலும் அதற்காக நான் பிரதிவாதியின் ஏடிஎம் கார்டை வாங்கி பணத்தை எடுத்துக்கொள்வேன் என்றால் சரியல்ல. நான் பலமுறை பிரதிவாதியன் ஏடிஎம் லிருந்து பணம் எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அதிக வசதி படைத்தவர் என்பதால் என்னிடம் தாவா தொகையை கடனாக

வாங்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக போலியாக கடனுறுதிசீட்டை ஏற்படுத்திக்கொண்டு அதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.